விருதுநகர் மாவட்டத்தில்

ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் 14 புதிய மருத்துவ கட்டிடங்கள்!

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு - மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்!

விருதநகர், ஜூலை 18 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மொத்தம் ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டடங்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் , நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் கன்னிச்சேரி புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் துணை சுகாதார நிலைய புதிய மையங்கள், வட்டார சுகாதார அலகு, அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடம் என மொத்தம் ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர். ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் (17.07.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

அதன்படி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், நரிக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், நரிக்குடி ஊராட்சி நாலூர் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், பரளச்சியில் ரூ.120 இலட்சம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், கன்னிச்சேரிபுதூரில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், பட்டம்புதூரில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சிதம்பராபுரத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், அருப்புக்கோட்டையில் ரூ.30 இலட்சம் மதிப்பில் மலையரசன் கோவில் தெரு புதிய நகர்புற துணை சுகாதார நிலைய கட்டடம்,

இராஜபாளையம் நகராட்சியில் ஜமீன்கொல்லன் கொண்டான் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், சிவகாசி ஸ்டாண்டர்டு காலனியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், சிவகாசி மாநகராட்சியில் பெரியார் நகரில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், வெம்பக்கோட்டை ஊராட்சியில் எதிர்க்கோட்டை கிராமத்;தில் ரூ.35 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், கொங்கன்குளம் ஊராட்சியில் ரூ.35 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், சிவகாசி மாநகராட்சி கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், பள்ளப்பட்டி ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம் என என மொத்தம் ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டடங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்த தாவது:

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ் நாடு அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் விருதுநகர்; மாவட்டத்தில் ரூ.415.45 கோடி செலவில் பல்வேறு வகையான மருத்துவத்துறை கட்டிடங்களும், உயர் மருத்துவ உபகரணங்களும் இன்றைக்கு பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கிறது. அதன்படி, 7 இடங்களில் புதிய நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள், 30 இடங்களில் புதிய துணை சுகாதார நிலையக் கட்டிடங்கள், 21 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான கட்டிடங்கள், சாத்தூர் அரசு மருத்துவமனையில் ரூ.4 கோடியே 34 லட்சம் செலவில் தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறுப் பிரிவு கட்டிடம் ரூ.7 கோடியே 34 இலட்சம் செலவிலும், சிவகாசி அரசு மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன் ரூ.2 கோடியே 40 இலட்சம் செலவிலும், அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சை அறுவைப்பிரிவு அரங்கம், ரூ.381 கோடியே 45 இலட்சம் செலவில் விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என இதுவரை விருதுநகர் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.415.45 கோடி மதிப்பிலான கட்டடங்கள் தொடர்;ந்து திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விருதுநகர், திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் தலா ஒரு நகர்ப்புற நல்வாழ்வு மையம், சிவகாசி, இராஜபாளையம், திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் தலா இரண்டு நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் என மொத்தம் 7 நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்பட்டு, ஒவ்வொரு மையங்களிலும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் என்கின்ற வகையில் 4 பணியிடங்களுடன் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகிறது.

மேலும், அமைச்சர் பெருமக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் செம்பட்டி மற்றும் திருச்சுழி ஊராட்சி ஒன்றியம் இலுப்பையூர் என இரண்டு இடங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் 38 வருவாய் மாவட்டங்கள் இருக்கிறது. அதில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் நம்முடைய விருதுநகர் மாவட்டத்திற்கு மட்டுமே தரப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு விருதுநகர் சட்டமன்ற தொகுதியில் கன்னிச்சேரி புதூரில்; வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், பட்டம்புதூரில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், திருச்சுழி சட்டமன்ற தொகுதியில் பரளச்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடம், நரிக்குடியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், நாலூரில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், சிவகாசி சட்டமன்ற தொகுதியில் ஸ்டாண்டர்டு காலனி, பெரியார் நகர், கிருஷ்ணாபுரம், பள்ளப்பட்டி ஆகிய பகுதிகளில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் சிதம்பராபுரத்தில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், மலையரசன் கோவில் தெருவில் புதிய நகர்புற துணை சுகாதார நிலைய கட்டடம், இராஜபாளையம் சட்டமன்ற தொகுதியில் ஜமீன் கொல்லன் கொண்டான் கிராமத்தில் வட்டார பொது சுகாதார அலகு கட்டடம், சாத்தூர் சட்டமன்ற தொகுதியில், எதிர்க்கோட்டை புதிய துணை சுகாதார நிலைய கட்டடம், கொங்கன்குளம் ஊராட்சியில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம் என மொத்தம்; ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டடங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்லாமல்; ரூ.127 கோடியே 36 இலட்சம் செலவில் நமது மாவட்டத்தில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை என்பது எல்லா மாவட்டத்திலும் ஒரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை தான் இருக்கிறது. ஆனால் நம்முடைய மாவட்டத்திற்கு மட்டும் இராஜபாளையம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் வேண்டும் என்று அமைச்சர் பெருமக்கள் கோரிக்கை விடுத்த தன் அடிப்படையில் தற்பொழுது இராஜபாளையத்தில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரூ.40 கோடி செலவில் தரைத் தளம் மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்பட்டு வருகிறது. 90 சதவிகிதம் முடிவடைந்த நிலையில் மிக விரைவில் கட்டடம் திறந்து வைக்கப்பட உள்ளது.

மேலும், இராஜபாளையம் மாடசாமி கோவில் தெருவில் ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், சாத்தூர் சட்டமன்ற தொகுதியில் தாயில்பட்டி மற்றும் சாத்தூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், புதுசூரன்குடி, தாயில்பட்டி துணை சுகாதார நிலையம் என்று நான்கு இடங்களில் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் ரூ.30 கோடி 35 இலட்சம் செலவில் அருப்புக்கோட்டையில் மாவட்ட அரசு மருத்துவமனை கட்டும்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 85 சதவீதம் பணிகள் நிறைவுற்றிருக்கிறது. மிக விரைவில் அருப்புக்கோட்டையிலும், இராஜபாளையத்திலும் தமிழ்நாட்டிலே இரண்டு மாவட்ட அரசு மருத்துவமனைகளை தமிழ் நாடு முதலமைச்சர் திறந்து வைத்து விருதுநகருக்கு ஒரு மிகப்பெரிய அளவிலான சிறப்பினை சேர்க்கவிருக்கிறார்கள்.

அதேபோல் அருப்புக்கோட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு கட்டடம், மலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு கூடுதல் கட்டடம், கோவிலாங்குளம் பகுதிக்கு ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம் என்று அருப்புக்கோட்டையில் இந்தப்பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

சிவகாசி அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிசிச்சை பிரிவு கட்டடம் ரூ.32 கோடியே 54 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் ஒன்றும் மற்றும் சிவகாசி தொகுதியில் ம.புதுப்பட்டியில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திருச்சுழி சட்டமன்ற தொகுதியில் வீரசோழன் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், கல்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், டி.செட்டிக்குளம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், தொப்பலாக்கரையில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம், கே.புதூரில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம், கீழ்க்கண்டமங்கலத்தில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம், முஷ்டக்குறிச்சியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையக்கட்டடம், என்.பாத்தியக்குளம் பகுதியில் ஒரு துணை சுகாதார நிலையக்கட்டடம், மல்லாங்கிணறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மிகப்பெரிய கட்டடம் என்று இன்றைக்கு பல்வேறு கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது.

காரியாபட்டி பகுதியில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி நெடுஞ்சாலை பகுதி அமைந்திருக்கின்ற காரணத்தினால் ஒரு விபத்துப்பிரிவு கட்டடம் ஒன்று கட்டும் பணியும்,

திருவில்லிபுத்தூர் சட்டமன்ற தொகுதியில் ரூ.5 கோடி செலவில் அரசு மருத்துவமனையில் ஒரு ஒருங்கிணைந்த ஆய்வகம் கட்டும் பணியும், மம்சாபுரத்தில் ஒரு ஆரம்ப நிலைய கட்டடம், கீழ்கோடங்கிபட்டியில் ஒரு துணை சுகாதார நிலையக் கட்டடம், ஆர்.ரெட்டியாபட்டியில் ஒரு சுகாதார அலகு கட்டடம், டி.மானகசேரியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

விருதுநகர் தொகுதியில் விருதுநகர் நகர்ப்புற துணை சுகாதார நிலையக் கட்டடம், தாதம்பட்டி துணை சுகாதார நிலையக்கட்டடம், கடம்பன்குளம் பகுதியில் துணை சுகாதார நிலையக்கட்டடம், நடுவப்பட்டி துணை சுகாதார நிலையக்கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

எனவே, விருதுநகர் மாவட்டத்திற்கு மட்டும் தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவத்துறை சார்ந்த கட்டடங்கள் எது வேண்டும் என்று கேட்டாலும், மருத்துவத்துறைக்கு நிதி வேண்டும் என்று கேட்டால் தயங்காமல் செய்து கொண்டிருக்கிறார்.

இதுபோன்று மருத்துவத் துறைக்கு தேவையான திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என தெரிவித்தார்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தெரிவித்த தாவது:

ஒரு அரசிற்கு மிகவும் முக்கியமான துறைகள் சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளாகும். வீடு மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமே முதன்மையானது. தமிழ் நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு எண்ணற்ற திட்டங்களை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் பொதுமக்களுக்கு மருத்துவ சேவையாற்றி வருகிறது.

தமிழகத்தில் முதன்மையான துறையாக இருக்கும் மருத்துவ துறை அனைத்து இடங்களிலும், 108 அவசர ஊர்தி சேவைகள், எல்லா இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், அனைத்து மருத்துவமனைகளிலும் தேவையான மருத்துவர்கள் என சிறப்பாக செயலாற்றி வருகிறது.

அந்த வகையில் இன்று மாவட்டத்தில் ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கு மருத்துவ சேவைகள் சென்றடையும் வகையில், இது போன்று எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு தொடர்ந்து செயலாற்றும் என தெரிவித்தார்.

அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு!

இந்நிகழ்ச்சியில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

விருதுநகர் மாவட்டத்திலே கிழக்கே நரிக்குடி பகுதி முதல் மேற்கே இராஜபாளையம் வரை இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளில் மிகச் சிறப்பாக மருத்துவ கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் 4 ஆண்டு கால ஆட்சியில் நாட்டு மக்களின் நலனுக்கான முன்னனியில்; இருக்கக்கூடிய துறைகளில் மருத்துவர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் அவர்களின் செயல்பாடுகள் விரைவாகவும், மக்களை சென்றடையும் வகையில் அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மூளை முடுக்கு எல்லாம் இருக்கக்கூடிய இடங்கள் மற்றும் மலை பகுதியில் மருத்துவ வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களை தேடி மருத்துவம், நம்மைக்காக்கும் 48 ஆகிய எண்ணற்ற திட்டங்களாக இருந்தாலும் சரி சாதாரண ஏழை எளிய மக்களையும் சென்றடையும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் சிறப்பாக உருவாக்கபட்டுள்ளது.

சமீபத்தில் திருச்சுழி தொகுதி இலுப்பையூரில் ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் மருத்துவ வசதி பெற வேண்டும் என்றால் சாதாரணமாக 25 கீ.மீ தொலைவில் சென்று வந்த நிலையில், கோரிக்கையின் அடிப்படையில், நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுபோன்று ஏழை எளிய மக்களுக்கும் அடிப்படை மருத்துவ வசதி சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு செயலாற்றி வருகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்த தாவது:

தமிழ்நாடு அரசின் மூலம் மாவட்டத்தில், தொடர்ச்சியாக புதிய மருத்துவ உட்கட்டமைப்பு பணிகளும், பல்வேறு நலத்திட்ட உதவிகளும்; அதோடு சமூக பொறுப்புணர்வு நிதியின் மூலமும் மருத்துவத்துறைக்கு தேவையான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், நமது விருதுநகர் மாவட்டத்தில் இன்று ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், பொதுமக்களின் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. ஜெயசிங்;, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.யசோதாமணி, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கோவை ஆனைமலை ஆழியாறில்

சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதி உதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 18 -

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியார் கிராமம், வால்பாறைஆழியார் சாலை, சின்னார்பதியில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியார் கிராமம், நவமலைபதியைச் சேர்ந்த 22 நபர்கள் நேற்று (17.7.2025) காலை டாடாஏஸ் வாகனத்தில் வேலை நிமித்தமாக ஆனைமலை வட்டம், ஆழியார் கிராமம், வால்பாறைஆழியார் சாலை, சின்னார்பதி என்னுமிடத்தில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மேற்படி வாகனம் சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த திருமதி.ராணி (வயது 45) க/பெ.மணிகண்டன் என்பவர் சம்பவ இடத்திலும், திலகராஜ் (வயது 40) த/பெ.கருப்பன் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலும், சஞ்சய்குமார் (வயது 20) என்பவர் மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 19 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தர விட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில்

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட சிறப்பு முகாம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜூலை 18-

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வாண்டையார் திருமண மண்டபத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் நடைபெறவுள்ள சிறப்பு முகாம்களை தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட நிகழ்ச்சியினை தொடர்ந்து நகர்ப்புறத்தில் பெரம்பலூர் நகராட்சிக்கு உட்பட்ட என்.எஸ்.கே மஹாலிலும், ஊரக பகுதிகளுக்காக வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பொதுமக்கள் காணும் வகையில் நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வினை ஏராளமான பொதுமக்கள் காணொளி காட்சி வாயிலாக நேரலையில் பார்வையிட்டனர்.

உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சித்தளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற ஊரகப் பகுதிகளுக்கான சிறப்பு முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சார ரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முகாமில் துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, மனுக்களை விரைந்து பதிவு செய்திட தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பிட அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததா வது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசின் சேவைகள் அனைத்து தரப்பு பொதுமக்களுக்கு விரைவாகவும், எளிதாகவும் கிடைத்திடும் வகையில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புறம், ஊரகப் பகுதிகளில் 10,000 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் நகர் மற்றும் கிராமப்புறத்தில் 86 முகாம்கள் நடைபெறவுள்ளது.

இம்முகாம் தொடர்பாக தன்னார்வலர்களும் மகளிர் சுய உதவிக்குழுக்களும் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்களை வழங்கி பல்வேறு அரசுத்துறைகளின் திட்டங்கள் மற்றும் சேவைகளை விவரித் துள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 08 முகாம்கள் 15.07.2025 அன்று (செவ்வாய் கிழமை) முதல் 18.07.2025 (வெள்ளிக்கிழமை) வரை நடைபெற உள்ளது. இச்சிறப்பு முகாம்கள் காலை 09.00 மணியிலிருந்து மதியம் 03.00 வரை நடைபெறும்.

முகாம்களை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தி துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்ப ட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, கால்நடை பராமரிப்பு பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, வேளாண்மை உழவர் நலத் துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை ஆகிய துறைகளின் சார்பில் 46 வகையான சேவைகள் இந்த முகாம் களின் மூலம் வழங்கப்பட உள்ளது. பொதுமக்கள் இந்த சேவைகள் தொடர்பாக ஏதேனும் கோரிக்கைகள் இருந்தால் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெறும் முகாம்களில் கோரிக்கை மனுக்களை வழங்கலாம். அவ்வாறு முகாம்களில் பெறப்படும் மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பாக இந்த சிறப்பு முகாம்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் வருவாய்த்துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, சுகாதா ரத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் கீழ் 25 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் வழங்கினார்.

நகர்புறத்திற்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் பெரம்பலூர் என்.எஸ்.கே திருமண மஹாலில் நடைபெற்றதை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ்,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில் துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டார்.

மாற்றுத்திறனாளிகள் மனுக்கள் பதிவு செய்யப்படும் பகுதியினை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அப்போது காதொலி கருவி வேண்டி திருமதி ஜெயசக்தி என்பவர் மனு அளித்தார். அம்மனுவின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் பயனாளிக்கு வழங்கினார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் கருக்காக்குறிச்சி திருச்செல்வம் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கருதெற்குதெரு பிள்ளையார் கோவில் திடலில் நடைபெற்ற மாபெரும் மின்னொளி கபாடி போட்டியின் இறுதி ஆட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் துவக்கி வைத்தார். நிகழ்வில் கறம்பக்குடி தெற்கு ஒன்றிய